1971 ஜூலை 29] [திரு. க. அன்பழகன்]

கள், பட்டதாரிகளுக்குச் சமமாக, படிப்பு உடைய இண்டிஜினஸ் மெடிசன், இண்டக்ரேடட் மெடிசன் துறையில் படித்தவர்களுக்குச் சமமாக வாய்ப்பு பெறுகிற, உரிமை பெறுகிற இந்த ஒரு நல்ல திருத்தத்தை, அவர்கள் வரவேற்றதற்காக நன்றி தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எனவே, இந்தத் திருத்த மசோதாவை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the Tamil Nadu Registration of Practitioners of Integrated Medicine (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 26 of 1971), be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration clause by clause.

Clauses 2 and 3 were put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, I move—

"That the Bill be passed."

The motion was put and carried and the Bill was passed into law.

(9) அரசினர் தீர்மானம்.

அலுவல் வரிசையில் மாற்றம்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, "நமது சட்டப்பேரவை நடைமுறை விதிகளின் 21(3) பிரிவின்படி இன்றைய நிகழ்ச்சி நிரலில் அரசினர் சட்ட முன் வடிவுகள் என்ற தலைப்பில் இனம் 5-க்குப் பிறகு இனங்கள் 11, 12ஐ எடுத்துக் கொள்ளவேண்டும்" என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

(7) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஊ) தமிழ் நாடு 1971-ம் ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை—வாடகைக் கட்டுப்பாடு) நடவடிக்கைகளை செல்திறன் ஆக்குதல் சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1971).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தமிழ் நாடு 1971-ம் ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை—வாடகைக் கட்டுப்பாடு) நடவடிக்கைகளை செல்திறன் ஆக்குதல் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1971)ஐ பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கோருவார்கள்.